**தலைப்பு 283 – வனப் பாதுகாப்புத் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 283 – வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 யூலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ரூபா 369,361,875 வேறுபாடு காணப்பட்டதன் காரணமாக சரியான தரவுகளை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்தமை. | 1.6.2(இ)(iii) |
| 1.6.1(ஈ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 415,455 ஆன உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதிக்கு ஒன்று சேர்க்கப்பட்ட ரூபா 3,370,000 பெறுமதி உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக சரியான தரவுகளை உள்ளடக்கிய கணக்குகள் தயாரித்து தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை. | 1.6.2(இ)(ii) |
| 1.6.1(உ) | காணி மற்றும் காணி அபிவிருத்திக்காக 2021 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,237,217,599 தொகையில் ரூபா 1,188,135,714 தொகை நிதியல்லா சொத்துக்கள் கணக்கு அறிக்கையில் உள்ளடக்கப்படாமையின் பிரகாரம் சரியான கணக்குகள் தயாரிக்க வேண்டியிருந்தமை. | 1.6.2(இ)(iv) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வனப் பாதுகாப்பு திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட பொறுண்மையான வழுக்களின் காரணமாக 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி அந்த நிதிக் கூற்றுக்கள் அகற்றப்பட்டிருந்தது. மீண்டும் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2023 மே 31 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் தாமதமான காலம் 03 மாதங்கள் ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வழுக்கள் இன்றி தயாரித்து குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமான பெறுவனவு

திணைக்களத்தின் வருமான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 3,000 மில்லியனாக இருந்த போதிலும், அது ரூபா 1,600 மில்லியனாக வருமான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டில் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 2,082 மில்லியன் | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் சரியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனமையால் ரூபா 918 பில்லியனால் வருமான எல்லையினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ii) | 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானக் கணக்கின் பட்டோலை 05 இன் பிரகாரம் கடந்த வருடத்திற்கு முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானம் ரூபா 555,018,063 ஆக இருந்த போதிலும், 2028 ஆம் ஆண்டிற்குரிய வருமானக் கணக்கில் (DGSA-revenue 02) மற்றும் அதற்குரிய நிலுவை வருமானக் கூற்றில் அது ரூபா 488,264,949 ஆக காண்பிக்கப்பட்டதனால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நிலுவை வருமானம் ரூபா 66,753,114 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமான கணக்கிற்குரிய நிலுவை வருமான அறிக்கையில் படி 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 1,060,445,374 ஆன முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 59,920,642 ஆனமையால் 2022 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 1,000,524,732 ஆகும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கணக்கில் (DGSA-revenue 02) அந்த நிலுவை வருமானம் ரூபா 901,779,894 ஆக காண்பிக்கப்பட்டதனால் ரூபா 98,744,838 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | சேகரிக்கப்பட்ட சரியான வருமானம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அம்பாறை மாவட்ட வன அலுவலகத்திற்குரிய 2019 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட வேண்டிய ரூபா 32,733,901 நிலுவை வருமானம் 2022 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 31,982,888 தொகை 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் திணைக்களத்தின் நிலுவை வருமான கணிப்பீட்டு முறைமை திருப்திகரமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது வருமான கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | நிலுவை வருமானம் சரியாக இனங்கண்டு சேகரித்தல் தொடர்பாக சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (v) | பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வன அலுவலகங்களினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கல் குவாரி உரிமையாளர்கள் இருவரிடம் இருந்தும் மற்றும் தனியார் கம்பனி ஒன்றிடம் இருந்தும் அறவிட வேண்டிய முறையே ரூபா 77,366,295 மற்றும் ரூபா 121,613,898 நிலுவை கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன், அந்த நிலுவை பணம் தொடர்பான கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கட்டணங்களில் 25 சதவீதம் மாத்திரம் 36 தவணைகளில் அறவிடப்பட்டதாகவும் உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தனியார் கம்பனியில் இருந்து நிலுவை இறை தொகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை சரியாக கணக்கீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 10,715,114 கடன் மீதியில் 03 மாதங்கள் முதல் 05 வருடங்கள் | ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பெறுமதி ரூபா 5,286,508 தொகையும், | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் பணத்தை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| வரையான காலம் கடந்திருந்த ரூபா 8,912,194 கடன் மீதி தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ரூபா 4,633,250 தொகையும் ஆகும். | முகாமைத்துவத்தால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை புனரமைப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் செலவிடப்படாத ரூபா 1,106,846 தொகை 16 வருட காலமாகவும், சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் 15 இற்கான நிர்வாக செலவினத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 1,152,314 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகும், ரூபா 380,273,079 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகும். நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 04 வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | தொடர்ந்தும் வைப்பாக பேணிச் செல்வதற்கான தேவை இல்லாத வைப்புக்களை இனங்கண்டு அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 14 செலவின விடயங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 604,218,923 கூட்டுத்தொகையான | நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதி சீராக்கப்படாமை நாட்குறிப்புக்கள் மூலம் சீராக்குவதற்கு | ஆரம்ப மீதியில் வேறுபாட்டிற்கு தாக்கமளித்த காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களில் மீதியில் 2022 சனவரி 01 இல் உள்ளவாரு ஆரம்ப மீதியாக எடுக்கும் போது 09 செலவின விடயங்களின் பெறுமதி ரூபா 1,988,535,398 அதிகரித்தும் 05 செலவின விடயங்களின் பெறுமதி ரூபா 700,225 குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்படாமையின் காரணமாக 2022 சனவரி 01 இல் உள்ளவாறு சொத்துக்களின் மீதி ரூபா 1,987,835,173 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆலோசனை மற்றும் வழிகாடடல் வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 4,229,027,677 ஆன பெறுமதி ரூபா 4,210,202,677 ஆனமையால் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 18,825,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பதில் பிழையானதாகும். | இடம்பெற்ற வேறுபாடுகளை சரி செய்து சரியாக இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களின் ஆரம்ப மீதியான ரூபா 415,455 தொகை சேர்க்கப்பட்ட ரூபா 3,370,000 பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குரிய தகவலகள் 2023 யூன் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (iv) | காணி மற்றும் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட எனினும், நிதியல்லா சொத்துக்களாக கணக்கு அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 1,188,135,714 தொகை 2022 ஆம் ஆண்டின் கணக்குகளிலும் | பதிலளிக்கப்பட வில்லை. | சரியான தரவுகளை உள்ளடக்கி கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படும். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | திணைக்களதிற்கு சொந்தமாக 400 மோட்டார் சைக்கிள்களுக்கு மேற்பட்ட அளவு காணப்பட்ட போதும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 37,500 பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை சரியான கணிப்பீடு செய்வதற்கும், சரியான பதிவேடுகளில் இடுவதற்கும் எதிர்காலத்தின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| | நிதியல்லா சொத்துக்கள் கணக்கு சரியாக பேணிச் செல்வதற்காக திணைக்களத்தால் முறையான புத்தகங்கள் பேணிச் செல்வதற்காக திணைக்களத்தால் முறையான புத்தகங்கள் பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான சரி செய்வதல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குக்கள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முடியுள் சார்ந்த நிலையான சொத்து பதிவேடு நாளது வரையாக்கி சொத்துக்கள் முகாமைத்துவம் முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | **காசேடு** | | |
| | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.4 ஆம் பந்தியின் பிரகாரம் கையினால் பேணிச் செல்லப்படுகின்ற காசேடு நாளது வரையாக்குவதற்கோ அல்லது சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக பெறப்பட்ட காசேட்டில் அச்சிடப்பட்ட பிரதியொன்று தனியாக கோவையிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட ஏற்படுகள் பிரகாரம் கையினால் பேணிச் செல்லப்படுகின்ற காசேட்டை நாளது வரையாக்குவதற்கோ அல்லது சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பெறப்பட்ட காசேட்டை அச்சிடப்பட்ட பிரதியொன்று தனியாக கோவையிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | **திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினம்) பேரேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினம்) பேரேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 138 ஆவது பொது படிவத்தின் படி திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினம்) பேரேட்டில் உறுதிச் சீட்டு இலக்கம், செலவினங்களின் மொத்த கூட்டு மொத்தம், சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாடு போன்ற விடயங்களை உள்ளடக்கி நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (iv) | **பொருட் பதிவேட்டு புத்தகம்** | | |
| | நிதிப் பிரமாணம் 454 இன் பிரகாரம் பொருட் பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 44 ஆவது பொது படிவத்தின் படி பொருட் பதிவேட்டு புத்தகம் நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(v) பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணை பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 890 மற்றும் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணையினை அறவிட்டு அந்த தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை பதிவேடு பேணிச் செல்லப்படும். |
| **(vi) இழப்பு தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்ட போது அந்த பதிவேடு நாளது வரையான பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட பதிவுகளின் படி இழப்பு தொடர்பான பதிவேடு முறையான பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| **(vii) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தினந்தோறும் பொறுப்புக்களை பரீட்சிக்கக் கூடியவகையில் பொறுப்புக்கள் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| **(viii) கடன் மற்றும் முன்பண பதிவேடு** | | |
| 2017 யூலை 05 ஆம் திகதி இலக்கம் 256/2017 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சீ.சீ. 10 படிவம் மற்றும் அந்த படிவத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண பதிவேடு தயாரிக்க வேண்டியிருந்த | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீண்டும் ஏற்படாத வகையில் 2023 ஆம் ஆண்டின் முற்பணம் ''பீ'' இணக்கக் கூற்று தயாரிக்கும் போது நடவடிக்கை எடுக்குமாறு விடய உத்தியோகத்தருக்கும், மேற்பார்வை | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு தொடர்பாக போதியளவான கணக்கீட்டு முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பேணிச் செல்வதற்காக இந்த பதிவேடுகள் நாளது |

| | | |
|---|---|---|
| போதும், கடன் மற்றும் முற்பண பதிவேடு, கடன் பட்டோர் பதிவேடு, கடன் கொடுத்தோர் பதிவேடு மற்றும் முற்பண கட்டுப்பாட்டு கணக்கு என்பன நாளது வரையாக்கப்பட்டு சரியான பிரகாரம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தருக்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது. | வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமானம் முகாமைத்துவம்**

வருமான மதிப்பீடு தயாரித்தல் நிலுவை வருமானத்தை சேகரித்தல், வருமானத்தை கைவிடல் மற்றும் பதிவளித்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் முகாமைத்துவத்தின் கீழ் காணப்படுகின்ற காணிகளில் அமைந்துள்ள கருங்கல் உடைத்து அகற்றும் போது 2009 மே 06 ஆம் திகதிய இலக்கம் 1600/18 என்ற வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய கட்டணம், நியாயமான காரணங்கள் இன்றி 50 சதவீதத்தால் குறைப்பதற்கு 2020 நவம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 14/2020 என்ற ஒன்றிணைந்த அமைச்சரவை குறிப்பிற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் கட்டணங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக அரசாங்க வருமானத்தில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டமை 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தாதிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டிற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட 05 மாவட்ட வன அலுவலகங்கள் மாத்திரம் கருங்கல் உடைத்தலால் | பதிலளிக்கப்படவில்லை . | அரசாங்கத்தால் வன வழங்களை பாதுகாத்தல் மற்றும் வனங்களை முகாமைத்துவம் செய்வதற்காக கணிசமான கிரயம் ஒன்று செய்யப்படுகின்றமையினால் அறவிடப்பட்ட கட்டணங்களை குறைக்காமல் வன பொருட்களை விநியோகித்தலின் காரணமாக ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களை புணரமைப்பதற்கு போதியளவான கட்டணம் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழக்கப்பட்ட வருமானம் ரூபா 18,204,346 ஆகும். | | |
| (ஆ) | திணைக்களத்தின் பிரதான வருமான மூலமான காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் தனியார் மர போக்குவரத்தில் இருந்து கிடைக்கின்ற வருமானம், சரியான மதிப்பீடு தயாரித்தல் நிலுவை வருமானம் கணிப்பிடல் மற்றும் அறவிடுவதற்கான ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படாமையால் உரிய தரப்பினரிடம் இருந்து அரசாங்க வருமானத்திற்கு பணத்தை செலவு வைத்தல் புறக்கணிக்கின்றமை அவதானிக்கப்பட்டதுடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,491,611,273 ஆன நிலுவை வருமானம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,885,180,372 வரை உயர்வடைந்திருந்தது. | அரச இறை முறைமையின் அடிப்படையில் கிடைக்கின்ற இந்த வருமானம் உற்பத்தி செய்யப்பட்ட அலகின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டதன் பின்னர் அறவிடப்படுகின்றமையால் தொடர்ச்சியாக நிலுவை வருமானம் ஏற்படுகின்றது. அடுத்து வரும் ஆண்டில் உடன்படிக்கை செய்யும் போது சகல நிலுவை வருமானத்தையும் அறவிட்டதன் பின்னர் உடன்படிக்கை செய்யப்படும். | காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை கால ரீதியில் அறவிடுவதற்கும் வருமானங்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் வருமான முகாமைத்துவத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தனியார் தொலைபேசி நிறுவனம் ஒன்றினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது 08 தொலைபேசி சமிஞ்சை கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், உரிய உத்தியோகத்தர் தமது கடமைகளை கைவிட்டதன் காரணமாக பெற முடியுமாக இருந்த அனுமதிப் பத்திர வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | சில வருடங்கள் முதல் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி, அரசியல் ரீதியான நிலைமையின் அடிப்படையில் கிராமங்களுக்கு தொலைத் தொடர்பு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த கோபுரங்களை நிர்மாணித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. வேரகல கந்தவதாகட கோபுரங்களுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்க வருமானத்தை கட்டியெழுப்புவதற்காக காணப்படுகின்ற சந்தர்ப்பங்களை கைவிடாமல் பயன்படுத்திக் கொள்வதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2015 யூலை 20 ஆம் திகதி இலக்கம் 01/2015 என்ற அரச நிதிக் கொள்கையின் சுற்றறிக்கையில் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான நிர்வாகம் மற்றும் கணக்கீடுகளை அபிவிருத்தி செய்தல், மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கை பகுப்பாய்வு போன்றவைகளுக்காக அறவிடப்பட்டுள்ள வருமான அளவு மற்றும் சேகரிக்கப்பட்ட வருமான அளவு தெளிவாகவும் முறையாகவும் மற்றும் சரியாகவும் இனங்காணக் கூடிய வகையில் அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மாதிரி கட்டமைப்பு தயாரித்து சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை தீர்மானித்து இலக்கை அடைந்து கொள்ளல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை பெறுப்புக்களை கையளித்து வருமானங்களை சேகரித்தலை ஒழுங்குபடுத்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கையிடுகின்றோம் . | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான முகாமைத்துவத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 வது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்ல வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை செய்து அதன் பிரகாரம் முறைமையினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும், அந்த | பதிலளிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்று தேவையான நேரத்தை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணிக்க வேண்டியிருந்த போதிலும், அறிக்கை 1.6.1 மற்றும் 3.4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்க வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்பத்தப்பட வேண்டியிருந்த போதும் அறிக்கையின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

<u>அவதானிப்புக்கள்</u>

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(4) | - | நட்டம் இழப்பு ஏற்பட்ட திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்கும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இழப்புக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் நட்டத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் குறித்துரைத்த காலப் பகுதியில் ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கும் குறைபாடுகளை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்ட இழப்பு ஏற்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2) மற்றும் (5) | 637,480 | முற்பணம் பெறப்பட்டு பணிகள் முடிவடைந்தவுடன் கட்டு நிதி தீர்க்க வேண்டியிருந்த போதிலும். 41 சந்தர்ப்பங்களின் போது முற்பணத்தை தீர்ப்பதற்கும் 15 நாட்கள் முதல் 256 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | குறைபாடுகள் மீண்டும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. | முற்பணம் பெறப்பட்ட பணிகள் முடிவடைந்தவுடன் தீர்த்து வைப்பதற்கும், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை வழிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iii) | நிதிப் 395(இ) | பிரமாணம் | - | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 29 வங்கி கணக்குகளுக்குரிய இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வங்கி இணக்க கூற்று தயாரித்து குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iv) | நிதிப் 396(ஈ) | பிரமாணம் | 544,505 | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் விநியோகிக்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய 190 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பிழையானதாகும். | விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்த 06 மாதங்களை விஞ்சிய காசோலைகள் நிதிப் பிரமானத்தின் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நிதிப் 565(3) | பிரமாணம் | - | பொது வைப்பு கணக்கு தொடர்பாக சமப்படுத்தும் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பொது வைப்பு கணக்கு தொடர்பாக ஒவ்வொரு மாதமும் சமப்படுத்தல் கணக்கொன்று தயாரித்து அது திறைசேரி அச்சிடல் குறிப்புடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (vi) | நிதிப் 565(5) | பிரமாணம் | - | பொது வைப்புக் கணக்கிற்குரிய பொது 71 படிவத்தின் தயாரித்து அடுத்து வரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மாதாந்த வைப்பு பொழிப்பு கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதாந்த வைப்பு பொழிப்பு கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரச நிதி கூற்றறிக்கை இலக்கம் 05/2016 மற்றும் நிதிப் பிரமாணம் 507 மற்றும் 756 | - | வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொண்டு உரிய அறிக்கை அடுத்து வரும் ஆண்டின் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் 2022 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மெய்யாய்வு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு குறித்துரைத்த காலப் பகுதியில் பூர்த்தி செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து சொத்துக்கள் முகாமைத்துவத்திற்காக நல்லாலுகை முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 | - | 12 மாதம் ஓட்ட காலத்தின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் எஞ்சின் தொடர்பான பிரதான பழுதுபார்த்தல்களின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை பல வருட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவு பரிசோதனையை ஆரம்பிப்பதுடன், கூற்றறிக்கையின் இணைப்பு 01 இன் படி பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பான நல்லாலுகை உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (ESCAMP) நிதி ஏற்பாட்டின் கீழ் கண்ணெழிய ஒதுக்கப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கை காலத்தையும விஞ்சி இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 4,750,000 வேலை ஆரம்பிக்கும் முற்பண தொகையில் ரூபா 3,723,637 தொகை நிறைவேற்றப்பட்ட வேலைக்கான பகுதி பணத்தை செலுத்தும் போது அறவிடுவதற்கும் அதற்குரிய பிணையின் காலப் பகுதியினை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பண பணம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அறவிட வேண்டிய பணத்தை பொருத்தமான பிரகாரம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்குகளின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பூச்சிய பெறுமதியுடன் காணப்படுகின்ற 18 வங்கி கணக்குகள் செயற்பாட்டில் உள்ளதாக என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன், 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் செயற்பாடற்று காணப்படுகின்ற வங்கி கணக்குகள் தொடர்பாக கண்டறிந்து அவற்றை இரத்து செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | தற்போது முடிவடைந்துள்ள ESCAMP செயற்திட்டத்திற்குரிய பூச்சிய பெறுமதியுடன் உள்ள அந்த வங்கி கணக்குகளை மூடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பூச்சிய பெறுமதியுடன் காணப்படுகின்ற 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் செயழிலந்து காணப்படுகின்ற வங்கி கணக்குகளை திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மூடுதல் வேண்டும். |

.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாவட்ட வன அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தின் 19 வங்கி இணக்க கூற்றுக்கள் 188 சந்தர்ப்பங்களின் போது இனங்காணப்படாத பெறுவனவுகளாக ரூபா 19,338,009 காணப்பட்டதுடன், அவற்றை சரியான இனங்கண்டு காசேட்டில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொதுத் திறைசேரிக்கு சரியான கணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. | சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வங்கிக்கு மேற்கொள்ளப்பட்ட நேரடி செலவு வைத்தல்களை இனங்கண்டு அந்தந்த சந்தர்ப்பங்களின் போது காசேட்டிற்கு கொண்டு வந்து பொதுத் திறைசேரிக்கு சரியான கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் இலக்குகள்

தூரநோக்கு மற்றும் செயற்பணி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் முடிவடையும் போது திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற ஒதுக்கப் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் ஏனைய காணிகளின் மொத்த காணி அளவு மற்றும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மொத்த காணி அளவுகள் தொடர்பாக போதியளவான தகவல்கள் கணக்காய்வின் போது பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், காட்டு காணிகள் வர்த்தமானியில் பிரசுரித்தல் மெதுவான நிலையில் காணப்பட்டமை | பதிலளிக்கப்படவில்லை. | திணைக்கள நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற ஒட்டு மொத்த காணி நில அளவு மற்றும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மொத்த காணி அளவுகள் தொடர்பான சரியான தரவுகளை பேணிச் செல்வதற்கும், காட்டு காணிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேச அலுவலங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கல பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | | செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 நவம்பர் 04 ஆம் திகதிய இலக்கம் 1/2020 என்ற வன சீவராசரிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனம் ஒன்றுக்கு உரித்தற்ற மேலதிக காட்டு காணிகள் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கியதன் காரணமாக ஒதுக்கப் பிரதேசம் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட வேண்டிய சில வன விளங்குகள் மேலும் பாதுகாப்பதற்கும் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் அச்சுருத்தலுக்கு உட்படக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | திணைக்கள நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்தும் பேணிச் செல்ல வேண்டிய காணிகளும், இவ்வாறு புறக்கணிக்கப்படும் ஆபத்தும் காணப்படுகின்றமை யால் காணிகளின் முறையான உரித்து உறுதிப்படுத்தப்பட ல் வேண்டும். |
| (இ) | முல்லைத் தீவு மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற 178,218.7 ஹெக்டேயர் நில அளவில் 1,550 ஹெக்டேயர் அளவு அளவிடை செய்யப்படாதிருந்ததுடன், 1932 ஆம் ஆண்டில் 6,825 ஹெக்டேயர் மற்றும் அதற்கு 80 வருடங்களின் பின்னர் 2012 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலனா காலத்தில் 74,797.63 ஹெக்டேயர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அளவிடை செய்யப்பட்டிருந்த 10,892.44 ஹெக்டேயரை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை | 2022.03.04 ஆம் திகதி அமைச்சு செயலாளரின் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது அரசியல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் காணிகள் யுத்த காலத்தினால் காடாக மாறியிருந்தமையும் அவற்றை தீர்த்து வைக்குமாறும் ஒதுக்க காடுகளை வர்த்தமானியில் | காணப்படுகின்ற நிலைமையில் முகாமைத்துவம் செய்து அந்த காணிகளை உரித்து உறுதிப்படுத்தப்பட ல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு குருநாகல் மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற 52,395.21 ஹெக்டேயர் நில அளவில் அளவிடை செய்யப்பட்ட 13,377.06 ஹெக்டேயர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 1895, 1918, 1936 மற்றும் 1939 என்ற ஆண்டுகளில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட குருநாகல் மொரகொல்ல, தியவகிரிகந்த, தல்கமுவ, மாரகல்கந்த என்ற வனாந்திரங்களில் 352.6 ஹெக்டேயர் அளவிடை செய்யப்பட்டு எல்லைகளை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் அளவிடல் மற்றும் காணிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கும் நடவடிக்கைகள் மெதுவான நிலையில் மேற்கொள்ளப்பட்டமையும் வன குற்றங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் போது பல்வேறு பிரச்சினைகளான நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டிய ஆபத்தும் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | பிரசுரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஈ) | திணைக்களத்தால் வன பயிர் செய்கைகளுக்காக 05 செயற்திட்டங்களின் கீழ் நாடு முழுவதும் அமைக்கப்பட்ட 40 நாற்று மேடைகளில் கான்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நாற்று மேடைகளில் காணப்படுகின்ற கன்றுகளின் இருப்பு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | திணைக்களம் நாற்று மேடைகளில் காணப்படுகின்ற ஒட்டு மொத்த கன்றுகளின் அளவு தொடர்பாக சரியான தரவினை பேணிச் சென்று கன்றுகளை உரிய காலத்தில் நடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | குறித்துரைத்த காலப் பகுதியில் கன்றுகளை நடுவதற்கோ அல்லது கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்காக திட்டமிடப்பட்ட வேலைத் திட்டமொன்று காணப்படாமையின் காரணமாக முல்லைத் தீவில் அமைந்துள்ள 02 நாற்று மேடைகளில் 2019 ஆம் ஆண்டு முதல் நட்டப்பட்ட 197,736 கன்றுகளில் அநேகமானவையும், கல்கமுவ அடர்ந்த வன ஒதுக்கப் பிரதேசத்தில் இணைந்ததாக மெதகம நாற்று மேடையில் 2022 ஆம் ஆண்டில் மற்றும் அதற்கு முன்னர் காணப்பட்ட 67,375 கன்றுகளில் 6,748 கன்றுகளும், 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தில் (ESCAMP) ரூபா 70,716,004 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நடப்பட்டு பராமரிக்கப்பட்ட போதும் கன்றுகள் கணிசமான அளவில் இறந்திருந்ததுடன், மேலும் கணிசமான கன்றுகளின் அளவு அசாதாரணமாக வளர்ந்திருந்தது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை, எரிபொருள் பிரச்சினைகளின் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. எனினும், இந்த கன்றுகளை வழுப்படுத்துவதற்கும் ஆரோக்கியமாக்குவதற் கும் செலவினங்களுக்கு நலன்களை பெற்றுக் கொள்ள முடியும். | குறித்துரைத்த காலப் பகுதியில் கன்றுகளை நடுவதற்கோ அல்லது பகிர்ந்தளிப்பதற்கோ போதியளவான திட்டம் தயாரித்து மேற்கொள்ளக் கூடிய ஏற்படுகின்ற இழப்புக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | விஷேட வன பயிர் செய்கை செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் ரூபா 77,964 செலவினத்தில் பொலித்தீன் உறைகளில் நட்டப்பட்ட 1000 கன்றுகள் எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் அளவினை விஞ்சி வளர்ந்திருந்ததுடன், நகர அண்மித்த வீதி பிரதேசங்கள், நடமாடும் நடைபாதைகள் இரு பக்கமும் நடுவதற்கும் மற்றும் கொழும்பு நகரத்தில் மர பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழங்குவதற்காக 2021 மற்றும் | 2022 ஆம் ஆண்டின் போது பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை இலக்காகக் கொண்டு இந்த கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்ட போதும், நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் அந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளது. தற்போது மிகையான வளர்ந்துள்ள நிலைமையில் பொலித்தீன்கள் வெடித்து பயன்பாட்டிற்கு | அரசாங்கத்தின் நிதி செலவிடப்பட்டு நட்டப்பட்ட இந்த கன்றுகள் அழிவடைவதற்கு இடமளிக்காத வகையில் ஆக்கபூர்வமான வழிகாளுக்காக ஈடுபடுத்துவதற்கு திணைக்களத்தால் முறையான திட்டமொன்றை தயாரிப்பதற்கு கவனம் செலுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | 2022 ஆம் ஆண்டுகளின் போது மெதகம நாற்று மேடையில் ரூபா 02 மில்லியன் செலவில் உற்பத்தி செய்யப்பட்ட 524 ரூட்போல் கன்றுகள் விநியோகிக்கப்படாமையால் 103 கன்றுகள் இறந்திருந்தன. | எடுக்கப்படுவதுடன், 2023 ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றது. | வேண்டும். |
| (எ) | குருநாகல் மாவட்ட வன அலுவலகத்தின் மூலம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக வெளிசாக்குவதற்காக கையளிக்கப்பட்ட 81 வேலைத் தளங்கள் குறித்துரைத்த காலத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 2023 பெப்ரவரி வரையிலும் கையளிக்கப்படாத வேலை கூறுகளின் எண்ணிக்கை 27 ஆனமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் மீண்டும் வன பயிர் செய்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறு கல்கமுவ அடர்ந்த காட்டு பிரதேசத்தில் அம்பன்பொல பீட்டுவேயில் 03 வேலைத் தளங்களில் 18,700 மரங்கள் முழுமையாக வணிக ரீதியில் செப்பனிடுவதற்காக 2021 ஆகஸ்ட் 09 ஆம் திகதி அரச மரக் கூட்டுத்தபானத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையில் அந்த பணிகள் நிறைவேற்றாமையினால் மிகுதி மரங்களின் வளர்ச்சி அதிகரித்திருந்தது. இந்த தாமதத்திற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து தாமதக் கட்டணம் அறவிடுவதற்கும் தாமதத்தை தவிர்த்துக் கொள்வதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்றையும் ஈடுபடுத்துவதற்கும் | குருநாகல் மாவட்டத்தில் முழுமையாக துப்பரவாக்கும் வேலைக் கூறுகள் குறித்துரைத்த காலத்தில் கையளிக்கப்படாமையின் அடிப்படையில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணை பணத்தை அரசாங்கத்திற்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரச மர கூட்டுத்தாபனத்தின் மூலம் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வணிக ரீதியில் செப்பனிடுவதற்காக கையளிக்கப்பட்ட வனப் பயிர்களை வெட்டும் நடவடிக்கைகள் தற்போது வரையிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது டன், அவ்வப் போது அறிவிக்கப்பட்ட போதும் அது இது வரை வெற்றியளித்திருக்க வில்லை. | திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்களுக்கு இடையூறு இன்றி நிறைவேற்றுவதற்க ாக அரச மரக் கூட்டுத்தாபனத்திற் கு கையளிக்கப்பட்ட பணிப் பொறுப்புக்கள் தாமதம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஏ) | மரம் ஒன்றில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி காலத்தை விஞ்சிய 08 மாவட்டங்களில் பயிரிடப்பட்ட 234 நில கூறுகளில் மரங்களை துப்பரவாக்குவதற்காக அரச மர கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்படாமையினால் இந்த பயிர் செய்கை கூறுகளில் அநேகமானவை குற்றங்களுக்கும் ஏனைய இயற்கை அனர்த்தங்களுக்கும் உட்பட்டமையினால் அழிவுக்கு உள்ளாகும் ஆபத்து காணப்பட்டமையும் குறித்துரைத்த காலப் பகுதியில் மரங்களை வெட்டாமையினால் அரசாங்கத்திற்கு அரச இறை உரித்தற்று போனமையும் அவதானிக்கப்பட்டது. | மீள் வன பயிரிடல் திறைசேரியில் இருந்து உரிய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு, வருடாந்த மரங்களின் தேவை, நிலைபேறானதாக மரங்களின் அறுவடை முகாமைத்துவம் செய்தல், அரச மர கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் மரங்களை வெட்டுவதற்கு உள்ள இயலுமை போன்ற விடயங்களின் அடிப்படையில் முழுமையான வெட்டுவதற்காக அரசாங்க மர கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுகின்ற வன பயிர் செய்கையின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது. | அந்தந்த வன பயிர் செய்கைகளின் ஆயுட் காலம் மற்றும் வன குற்றங்கள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கின்ற விடயங்களை கவனத்தில் கொண்டு அவ்வாறான பயிரிடல் நிலங்களுக்கு முன்னுரிமை வழங்கி முழுமையாக வெட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | வனப் பயிரச்செய்கை முகாமைத்துவம் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளை அமுல்படுத்தாமையினால் கேகாலை, திருகோணமலை மற்றும் அநுதாராபுரம் மாவட்டங்களில் பயிரிடப்பட்ட 94 பயிர் நிலங்கள் தோல்வியடைந்திருந்ததுடன், அவற்றின் புனரமைப்பு நடவடிக்கைகளை உரிய பிரகாரம் பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்காமல் ஆயுட்காலம் பூர்த்தி அடைவதற்கு இடமளிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திறைசேரியில் இருந்து விஷேட வன பயிர் செய்கை செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு உட்படுகின்ற வன பயிர் செய்கை 892 ஹெக்டேயர் மீண்டும் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வன பயிர் முகாமைத்துவம் மற்றும் பின் தொடர் செயற்பாடுகள் திணைக்களத்தில் காணப்படுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கு இணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனத்தின் தூர நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 2006 மார்ச் 24 ஆம் திகதி தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரி படிவத்தின் பிரகாரம் வரிசை விடயங்களின் கீழ் அந்தந்த பிரிவுகளினால் பெறுகைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலைகள், பொருட்கள் சேவைகளின் விபரங்கள் மற்றும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கால அட்டவணையை உள்ளடக்கி விரிவான பெறுகைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 02/2020 என்ற வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் தேவையான விபரங்களுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகை திட்டம் தயாரித்து அவற்றை செயற்பாட்டிற்கு கொண்டு வருதல் வேண்டும். |
| (ஆ) | விதைகள் நட்டுதல் மற்றும் பராமரிப்பு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதிலும், கன்றுகளை பகிர்ந்தலித்தல் தொடர்பான செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாமையினால் திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு இடையே கன்றுகளை பகிர்ந்தளிக்கப்பட்டமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் எதிர்காலத்தில் நோக்கங்கள் மற்றும் அதற்குரிய பயன்பாட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தை உள்ளடக்குவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.3 பணிப்பொறுப்புக்ககள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மரங்களை வெட்டுதல் மேற்கொள்ளப்படுகின்ற குருநாகல் மாவட்டத்தில் 05 வன அலுவலகங்களுக்குரிய 108.7 ஹெக்டேயர் அளவான நில அளவு மீண்டும் மீள் வன பயிர் செய்கைக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான கன்றுகள் உற்பத்தி செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள நிதி ஏற்பாடு கிடைப்பதன் அடிப்படையில் 2023 மார்ச் மாதத்தின் போது கன்றுகளை உற்பத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தேவைகளை சரியாக இனங்கண்டு மீள் வன பயிர் செய்கைக்கான கன்றுகளை உற்பத்தி குறித்துரைத்த முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மும்மொழிகளிலும் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை ஒரு வருட தாமதத்தின் பின்னர் 2023 யூன் 06 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மும்மொழிகளிலும் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.4 வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 2,000,000 தொகையினை விஞ்சுகின்ற ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் நிறைவேற்ற முடியாதிருந்த போதிலும், கன்னெலிய பாதுகாப்பு நிலையத்தின் பழைய விரிவுரை கூடத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 2,547,166 ஆன மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கும் இயலுமை காணப்படும் போது ரூபா 1,816,008 மற்றும் ரூபா 731,158 வீதம் இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சமூக அடிப்படையிலரன விவசாய அமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | வேறு சங்கமொன்றை தெரிவு செய்து உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு காலம் போதாமையினை கருத்தில் கொண்டு அந்த விவசாய சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது, | சிக்கனமான முறையில் மதிப்பீட்டை தயாரித்து அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 08/2019 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களம் e-GP முறைமையின் கீழ் இலத்திரனியல் பெறுகைகளுக்காக பதிவு செய்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் e-GP பெறுகைகள் மூலம் இலத்திரனியல் பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்த காலி மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற வெகுணுகொட சுற்றுலா விடுதி 2020 திசெம்பர் மாதம் ரூபா | தற்போது சுற்றுலா விடுதி பொறுப்பாளர் அல்லது காவளர் நியமிக்கப்படாதிருந்தமையால் மற்றும் அந்த விடுதி | செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 687,337 செலவில் திருத்தப்பட்டிருந்த போதிலும், 2023 யூன் 30 ஆம் திகதி வரையிலும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | ஒதுக்கப்படாமையின் காரணத்தினால் தொடர்ச்சியாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த போதும், அதன் சுற்றாடலை பராமரிக்கும் கடமை நடவடிக்கைகளுக்கு வருகை தருகின்ற உத்தியோகத்தருக்கு தேவையான போது பயன்படுத்தப்படுகின்றது . | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 7 மில்லியனுக்கு அதிக வருமானம் உழைக்கக் கூடியதாக இருந்த கண்ணெளிய சுற்றுலா விடுதி 2020 சனவரி முதல் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த போதிலும், உரிய பராமரிப்பு மேற்கொள்ளப்படாமையினால் மலசல கூட முறைமை அழிவடைந்து கட்டிடத்தின் சுவரம் உடைந்து அதிக அளவில் பாதிப்புக்கு உட்படும் ஆபத்து காணப்பட்டது. இதனால் சுற்றுலா பிரயாணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல் முடியாமல் அரசாங்கத்திற்கு வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. | சமையலறை மற்றும் மலசலகூட முறைமை சார்ந்த அண்மித்த நிலங்கள் கீழிரங்கி இருந்தமையால் அவசர இடர் நிலைமைக்கு உட்பட்டதன் காரணமாக 2020 சனவரி முதல் தங்குமிடத்தை சுற்றுலா பிரயாணிகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. | தேவையான திருத்தங்களை மேற்கொண்டு செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முழுமையாக திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய குருநாகல் கும்புல்கம சுற்றுலா விடுதிக்காக 2020 ஆண்டின் போது ரூபா 500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், உரிய பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக சுற்றுலா விடுதியில் காணப்பட வேண்டிய தரத்தை பேணிச் செல்வதற்க முடியாதிருந்தது. | குருநாகல் மாவட்டத்தில் கட்டிடங்களை பராமரித்தல் தொடர்பாக அவ்வப் போது பிரதான அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், நிறப் பூச்சுக்களை பூசுவதற்காக 2023.03.27 ஆம் திகதி ரூபா 350,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை உரியவாறு முகாமைத்துவம் செய்து செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திணைக்களத்திற்கு சொந்தமான வாகன அணி பௌதீக மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், 711 வாகனங்கள் காணப்பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் 288 வாகனங்களின் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சகல வாகனங்களும் பௌதீக ரீதியில் மெய்மெய்யாய்வு செய்து அவற்றின் இருப்பு தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | திணைக்களத்தால் ஏனைய அரசாங்கத்திற் சொந்தமான வாகனங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அந்த வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உரித்து தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், உரித்தை கையேற்பதற்கோ அல்லது மீள கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. காணி, நீர் பாசம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்குரிய இலக்கம் 64-4438 என்ற லேன் ரோவர் வகையின் ஜீப் வண்டி காலி மாவட்ட வன அலுவலகத்தில் 2017 ஆம் ஆண்டில் இருந்தும் வடகிழக்கு மாகாண சபைக்குரிய இலக்கம் 52-5093 என்ற நிசான் வகையின் கெப் வண்டியொன்றும் மன்னார் மாவட்ட வன அலுவலகத்தில் 2015 ஆம் ஆண்டில் இருந்தும் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டு துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை இனங்கண்டு உரித்தினை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது மீள கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பதிவு செய்த ஆண்டும் அவதானிக்க முடியாத 13 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 05 துவிச்சக்கர வண்டிகள் என்பன 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய இலக்கம் 05/2020 என்ற நிதி அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் காலி மாவட்ட வன அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | செயலிழந்த வாகனங்களை விற்றுத் தீர்த்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு 2022.06.16 ஆம் திகதி கூட்டப்பட்டு 13 மோட்டார் சைக்கிள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய வாகனங்கள் தொடர்பாக நடடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கல்கமுவ ஒதுக்க வன அலுவலகத்தில் 04 வாகனங்களை பழுதுபார்க்காமையின் காரணமாக ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டதுடன், ஓட்ட நிலைமையில் காணப்படுகின்ற எனினும், பழுதுபர்க்க வேண்டிய 02 வாகனங்கள் உரிய நேரத்தில் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமல் செயற்பாடற்ற நிலைக்கு உட்படும் ஆபத்து காணப்பட்டது. பல வருட காலத்தில் இருந்து செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற குருநாகல் மாவட்ட வன அலுவலகம், குருநாகல் வன அலுவலகம் மற்றும் மெல்சிறிபுர ஒதுக்க வன அலுவலகங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 06 வாகனங்களும் விற்றுத் தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை களடுக்க்பபட்டிருக்கவில்லை. | ஒரு மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பதற்கும் 03 மோட்டார் வாகனங்களைவ ிற்றுத் தீர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடிச் சட்டங்கள் துருப்பிடித்துள்ள கெப் வண்டியினை எதிர்காலத்தின் போது பழுது பார்ப்பதற்கும், தற்போது ஓட்ட நிலையில் காணப்படுகின்ற கல்கமுவ மோட்டார் சைக்கிள்களுக்காக வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்கள் சரியாக பராமரிக்கப்பட்டு செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | விற்றுத் தீர்ப்பதற்காக இனங்காணப்பட்ட 169 வாகனங்களின் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்ற 101 வாகனங்களுக்காக திறந்த கூறு விலை கோருவதற்கும், 68 வகனங்களின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக விற்றுத் தீர்ப்பதற்கும் முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | தாமதமடைந்த அறிக்கையை உரிய குழுவிற்கு வழங்குமாறு வழங்கி விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் வேண்டும். |

### 3.7 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **<u>கணக்காய்வு அவதானிப்பு</u>** | **<u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u>** | **<u>பரிந்துரை</u>** |
|---|---|---|
| திணைக்களத்தின் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் தாள்கள் கிழிந்து பாதிப்புக்கு உட்பட்ட, எழுத்துக்கள் மங்கலாகி பல பக்கங்கள் ஒன்றாக ஒட்டப்படுள்ளமை, 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் அதில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் சரியாக பதிவேடுகளுக்கு கொண்டு வந்து பொறுப்புக்கள் ஆக்கப்பட்டதா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் நட்ட பதிவேடு குறித்துரைத்த தரத்தில் நாளது வரையாக பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன், இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **<u>கணக்காய்வு அவதானிப்பு</u>** | **<u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u>** | **<u>பரிந்துரை</u>** |
|---|---|---|---|
| (அ) | அலவ்வ - விகாரகந்த, 01/001 என்ற 35 ஹெக்டேயர் காணி 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட | கன்றுகளை பாதுகாப்பதற்காக கன்றின் ஆரம்பம் முதல் 02 அடி அளவிலான உயரத்திற்கு கருப்பு எண்ணெய் பூசவேண்டியிருந்த | வன பயிர் செய்கை முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக முறையான |

| | | | |
|---|---|---|---|
| | ‘‘காயா’’ வன பயிர்ச செய்கையை பாதுகாப்பதற்கு தவறியமையால் 2023 பெப்ரவரி 14 ஆம் திகதி வரையில் 70 சதவீதம் அளவு விளங்குகளினால் பாதிப்பு உட்பட்டமையின் காரணமாக அழிவடைந்திருந்த போதும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,886,452 செலவில் செலவிடப்பட்டு 04 பராமரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | போதிலும், மீண்டும் மீண்டும் விளங்குகளினால் பாதிப்பு உட்படுகின்றமையால் தற்போது சிகிச்சை இன்றி உயிரிழந்த கன்றுகளின் சதவீதம் 30 சதவீதம் - 40 சதவீதமான மட்டத்தில் காணப்பட்டது. பராமரிப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளது. | வேலைத் திட்டமொன்று தயாரித்து ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | குருநாகல் எத்கால வன பயிர் செய்கை உள்ளடக்கிய 04 வன பயிர் செய்கைகளுக்காக 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது உற்பத்தி செய்யப்பட்ட தேக்கு மரக் கன்றுகள் மற்றும் காயா கன்றுகள் 51,449 மிகையாக வளர்ந்ததன் அடிப்படையில் பொலித்தீன் வெடித்து செல்வதற்கும் மற்றும் எறும்புகளின் பாதிப்பினை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அழிவடைந்தமையினால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,208,372 பயனற்ற செலவினமாகி இருந்தது. | இந்த கன்றுகள் அழிவடைந்தமை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சரியான கால எல்லையில் வன பயிர் செய்கைகள் துப்பரவாக்கப்பட்டு வேலைத் தளம் மீண்டம் கையளிக்காமையின் அடிப்பைடயில் இடம் பெற்ற போதும் அரச மர கூட்டுத்தபானம் வைப்புச் செய்திருந்த பிணை பணத்தில் ரூபா 585,807 அரசாங்கத்திற்கு சொந்தமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | திணைக்களம் திட்டமிடப்பட்ட பிரகாரம் கன்றுகளை நடுவதற்கு அரச மர கூட்டுத்தாபனத்திற்கு உரிய வேலைகள் பூர்த்தி செய்து கொள்வதற்கும், உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை பராமரிப்பதற்காக தற்போது ஏற்படுகின்ற மேலதிக செலவினங்கள் மற்றும் கன்றுகள் அழிவடைந்தமையால் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நட்டம் என்பவற்றை அரச மர கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2021 செப்டம்பர் மாத இறுதியளவில் பிரதேசங்களில் நட்டுவதற்காக தயாரிக்குமாறு 2021 ஏப்ரல் மாதம் குருநாகல் மாவட்ட வன அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனையின் படி அந்த ஆண்டின் போது ரூபா 500,000 செலவினத்தில் பொலித்தீன் உரைகளில் உற்பத்தி செய்யப்பட்ட 5000 கன்றுகள் மற்றும் கல்கமுவ காட்டில் மெதகம நாற்று மேடையில் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 400,000 தொகை செலவில் உற்பத்தி செய்யப்பட்ட 12’’ x 18’’ அளவில் 4,000 கன்றுகள் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நாற்று மேடைகளில் வைக்கப்பட்டிருந்தது. | தற்போது இந்த கன்றுகள் பிரதேச கோரிக்கையின் அடிப்படையில் பரவலடைந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பட வழங்கப்படுகின்றது. | உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை திட்டமிடப்பட்ட முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.9 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| <u>கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> | <u>பரிந்துரை</u> |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வழங்கப்பட்டுள்ள காலத்தில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மர வியாபாரம் வருடாந்தம் பதிவு செய்தல் தொடர்பான பணிகள் காலி மாவட்ட வன அலுவலகத்தினால் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாத நிறுவனம் பதிவு இரத்துச் செய்வதற்கும், அனுமதிப்பத்திரம் இன்றிய மர வியாபாரங்களை நடாத்திச் செல்கின்ற நிறுவனம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கள பரிசோதனை செய்து பதிவு செய்யப்படாத மர வியாபாரங்கள் தொடர்பாக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல வன உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மர வியாபாரங்களை நடாத்திச் செல்லுதல் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்து அவற்றின் பதிவினை வருடாந்தம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | குருநாகல் மாவட்ட வன அலுவலகத்தில் கட்டுப்பாட்டின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற 370 மர வியாபாரங்கள் 2023 ஆம் ஆண்டிற்காக அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காதிருந்ததுடன், அதன் மூலம் 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாத இறுதி வரையில் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு இழக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 3,058,907 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2014.12.03 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 1891/26 என்ற வர்த்தமானி பத்திரத்தின் மூலம் மர வியாபாரங்களின் காலங்களை நீடிப்பதற்காக 06 மாதங்கள் சலுகை காலம் வியாபார உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையால் அந்த கால எல்லையில் இறுதியில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மர வியாபாரங்களை நடாத்திச் செல்லுதல் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்து குறித்துரைத்த திகதியில் வருடாந்த பதிவினை புதுப்பிப்பதற்குறிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 மதல் 2022 காலப் பகுதியில் முல்லைத் தீவு மாவட்ட வன அலுவலகம் மற்றும் ஒலுமடு வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஒதுக்க வன பிரதேசங்களில் அனுமதியற்ற துப்பரவாக்கல், மரம் வெட்டுதல், மரப் போக்குவரத்து செய்தல் போன்ற 1,420 குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குருநாகல் மாவட்ட அலுவலகத்திற்குரிய 05 வனங்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஒதுக்க வனங்கள் 253.053 ஹெக்டேயருக்கு இழப்பு ஏற்பட்டிருந்தமையும் அதற்குரிய வழக்கு நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக மேற்கொள்ளப்படுகின்றமையும் வன குற்ற மரங்கள் கணிசமாக குவித்து வைக்கப்பட்டு இறந்து செல்லுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வின் சமர்ப்பித்தலுடன் இணங்குகின்றோம். தாமதமின்றி வழக்கினை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், வழக்கு தீர்ப்பின் தாமதம் எங்களின் கட்டுப்பாட்டிற்கு புறம்பாக மேற்கொள்ளப்படுகின்றமையால் அது தொடர்பாக எதுவும் கூற முடியாதுள்ளது. இயலுமான சகல சந்தர்ப்பங்களின் போதும் கட்டளை பெற்று மரங்களைவ ிற்பனை செய்வதற்கும் அரச மர கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வன குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன். உரிய நீதிமன்றத்துடன், நேரடியாக தொடர்புபட்டு உரிய வழக்கிற்காக தீர்ப்பினை செயற்திறனாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 64 ஆம் பிரிவின் 2(இ)(i ) பந்தியின் பிரகாரம் வன குற்றங்களுக்கு ஈடுபடுத்தப்பட்ட அரசு உடமையாக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை ஏலத்தில் விற்பனை செய்து பெறப்படுகின்ற வருமானத்தில் சரி அரைவாசிக்கு குறையாத தொகை திணைக்கள நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும், அரசுடமையாக்கப்பட்ட எனினும், கால ரீதியில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத லொறி வண்டி மற்றும் 08 கை டக்டர் என்பன மெல்சிறிபுர வன அலுவலக வளவில், வெவரௌம நாற்று மேடை வளவிலும் மற்றும் குருநாகல் | நீதிமன்றத்தின் மூலம் ஏலமிடுவதற்கான மிகவும் மெதுவான நிலையில் மேற்கொள்ளப்படுவதுடன், ஏலத்தில் இருந்து விற்பனை செய்ததன் பின்னர் செலவு வைக்கும் போது அந்த தண்டனைப் பணமும் அவ்வாறில்லையாயின் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட தொகையும் குறிப்பிடப்படாதிருந்தமையால் இனங்காணுதல் கஷ்டமாக இருந்தது. | வன குற்றங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினால் உரிய நீதிமன்றத்துடன் நேரடியாக தொடர்புபட்டு அந்த பொருட்களை கால ரீதியில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வன அலுவலக வளவிலும் பாதுகாப்பு இன்றி தரித்து வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | குருநாகல் மாவட்ட 05 வன அலுவலகத்திற்குரிய வன குற்றங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு முதல் 2023 பெப்ரவரி மாதம் வரை நீதிமன்றங்களில் இருந்து கிடைத்த ரூபா 10,009,477 தண்டப் பணத்தில் சட்டத்தின் 64 ஆம் பிரிவின் 2(இ)(i) பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட வேண்டிய பரிசு பணம் செலுத்துவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது உத்தியோகத்தரின் செயற்திறனை குறைப்பது தொடர்பில் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு மாவட்ட வன அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற குற்ற அறிக்கைகள் அநேகமான அளவிற்கு தற்போது பரிசு பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 1,841,988 தொகை 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய பரிசு பணத்தை தாமதம் இன்றி செலுத்தி உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சிறிய அளவிலான மின்சார வலுக்கூடமொன்றை நடாத்திச் செல்வதற்காக வலு சக்தி தனியார் கம்பனிக்கு 2015 பெப்ரவரி மாதம் முதல் 200 பேர்ச் வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் பேர்ச் ஒன்றிக்காக ஆண்டொன்றுக்கு ரூபா 5,000 வீதம் முதலாவது ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 1,000,000 வரி தொகை பெறப்பட்டு அதன் பின்னர் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த கம்பனியால் உடன்படிக்கை செய்யப்பட்ட 200 பேர்ச் இற்கு மேலதிகமாக மேலும் 523.78 பேர்ச் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2023 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையில் 723.78 பேர்ச்களுக்காக 08 வருடங்களுக்காக அந்த கம்பனியில் இருந்து அறவிட | பதிலளிக்கப்படவில்லை. | வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளித்தரப்பினரால் காட்டில் இருந்து பெறப்படுகின்ற நிதி ரீதியான அல்லது மதிப்பிட முடியாத நலன்களின் பெறுமதிக்கு ஈடாகும் வகையில் கட்டணம் அறவிட வேண்டியிருந்தமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய பணம் ரூபா 40,349,839 ஆகும். | | |
| (எ) | தனியார் கம்பனியால் பேணிச் செல்லபடுகின்ற கருங்கல் குவாரி 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான கால எல்லையை விஞ்சி அகழ்வு செய்யப்பட்ட 541,471 கல் கியுப்களுக்காக திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 133,093,715 தொகை எதிர்வரும் 03 வருட காலத்தில் மாதாந்த தவணையாக அறவிடுவதற்கு 2020 ஒக்டோபர் மாதம் வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலம் அறவிட வேண்டிய ரூபா 77,638,000 இனால் ரூபா 66,158,183 அறவிடப்படாதிருந்ததுடன், ரூபா 5,000,000 மதிப்பிழந்த காசோலையும் அதனிடையே இருந்தது. | நிலுவை இறை தொகை ரூபா 58,764,080 இனை அறவிடுவதற்காக மேம்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரனையில் காணப்படுகின்றது. | தேவையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘வனாந்திரங்களை பாதுகாத்தல் மற்றும் மீளமைத்தல்’’ மற்றும் சுற்றாடல் முறைமை மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் செய்யப்பட்ட வனாந்திரங்களை பாதுகாத்தல், மீளமைத்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திகாக மேம்படுத்துதல், அழிவடைவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் உயிரியல் பல்வகைப்படுத்தல் இழப்பை தடுத்தல் ஆக 2020 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பிரதான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 02 இன் கீழ் 2030 ஆம் ஆண்டு வரையில் மேவுகை செய்யும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அதன் செயல் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வரையில் 32 சதவீதம் வரையும் அதிகரிக்கும் இழப்பை கொண்டுள்ளது. எனினும், 2022 ஆம் ஆண்டில் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் மொத்த வன அளவும் மற்றும் அதற்கு ஈடாக நிலைபேறான அபிவிருத்தி இலக்கையும் அடைந்து கொள்ளும் ஒட்டு மொத்த செயல் மன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் நோக்கங்கள் அடையப்பட்டது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்பு</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> | <u>பரிந்துரை</u> |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 3,229 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவி அணியினர் எண்ணிக்கை 2,504 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 725 ஆகும். அதனிடையே சிரேஷ்ட நிலைக்குரிய பிரதி மற்றும் உதவி வன பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 33 பேரையும், மூன்றாம் நிலைக்குரிய வன கட்டுப்பாட்டு (விஷேட) மற்றும் மாவட்ட வன உத்தியோகத்தர்கள் 22 பேரும், இரண்டாம் நிலைக்குரிய வன உத்தியோகத்தர்கள் 86 பேர்களும் மற்றும் பீட்டு வன உத்தியோகத்தர்கள் 127 பேர்களையும் உள்ளடக்கி 725 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமை விஷேடமாக பிரதேச அலுவலகங்களின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுதல் மற்றும் வன குற்றங்களை தடுப்பது தொடர்பில் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | முறையான அங்கீகாரம் ஒன்றை பெற்று ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது காணப்படுகின்ற ஊழியர் எண்ணிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியுமாயின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |